## முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**DW-1 – OS. No.219/2023**

2025 ம் ஆண்டு ஜீலை மாதம் 16-ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி முதன்மை சார்பு நீதிபதி திருமதி.V.ஸ்ரீவித்யா, எம்.எல்., முன்னிலையில் திருமதி.உஷாராணி, கிரேடு 2 பென்ச் கிளர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திரு.சண்முகம் | தொழில் : |
| த/பெ. : திரு. | வயது : |
| முகவரி : | மொபைல் எண்: |

**வாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி. எனது தரப்பு சாட்சிக்காக நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 09.12.2024 | வில்லங்க சான்றிதழ் 09.12.2024 | கணிணி நகல் | **பிசாஆ-9** |
| 2 | 07.12.2022 | தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் பெறப்பட்ட தகவல் மின் மேற்பார்வை பொறியாளரிடம் பெறப்பட்டது. | அசல் | **பிசாஆ-10** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு பிராது படி தீர்ப்பு அளிக்க வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன். பிசா ஆ-10 ஆவணம் வாதி தரப்பின் குறியீடு செய்யப்படுகிறது. ஆட்சேபனை என்ன வென்றால் பிசா ஆ-10 ஆவணம் வழக்கிற்க்கு சம்மந்தப்படாது என்பதே ஆகும்.

**<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

1.நான் பொறியியல் பட்டப்படிப்பு படித்து இருக்கிறேன். நான் தாக்கல் செய்திருக்கும் எதிர் கோர்உரிமை மனுவில் சொத்து விவரம் எதுவும்

சொல்லப்படவில்லை என்று சொன்னாலும் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து நீள அகலம் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

2.என்னுடைய எதிர் வழக்குரையிலும் அல்லது என்னுடைய வாதங்கள் எதிலும் நான் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தாக நான் சொல்லும் சொத்தின் நீள அகலங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். பிவாஆ–10 ஆவணம் முத்துசாமி எவ்வாறு யாரால் எப்போது வழங்கப்பட்டது என்ற விவரங்களை நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் கேட்டு வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான் அதற்குரிய விவரங்கள் அந்த ஆவணத்தில் இல்லை என்றும் சொன்னால் சரிதான்.

3.என் தகப்பனாருக்கு அந்த சொத்தில் பாத்தியம் ஏதுமில்லை என்பதால் தான் அவர் எந்த சொத்தை சொத்தின் பத்திரமும் கொடுத்து ஈபி சர்வீஸ் கனெக்சன் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.பிவாஆ–10–ல் குறிப்பிட்டிருக்கும் 0317100549 என்ற எண்ண்தான் நான் குறிப்பிடும் சர்வீஸ் கனெக்சன் எண் என்று சொன்னால் சரிதான். பிவாஆ–10 குறிப்பிட்டிருக்கும் சர்வீஸ் நம்பர் வேலப்ப கவுண்டர் பெயரில் தான் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். இணையதளத்தில் பெறப்பட்ட மேற்படி சர்வீஸ் கனெக்சன் என்ன இருக்கான விவரங்கள்

4.பிவாஆ–10 ஆவணம் அய்யம்பாளையம் கதவு எண் 5/51 என்ற முகவரிக்கு தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதான். கதவு எண் 49 க்கு என்ன மின் இணைப்பும் கொடுத்ததாக அதில் காணப்படும் என்று சொன்னால் சரிதான். 5/51 என்ற கதவு எண் என்னுடைய வீட்டின் எண் கிடையாது. பிவாஆ–10– கதவு எண்ணிற்கு தான் மின் இணைப்பு வழங்கப்பட்டதாக இருக்கிறது என்றும் சொன்னால் சரிதான் அது முத்துசாமி என்ற நபரின் பெயரில்தான் இருக்கிறது என்றும் சொன்னால் சரிதான் அப்படித்தான் பிவாஆ–10 இருக்கிறது.

5.பிவாசாஆ–6–ஆவணத்தில் மின் இணைப்பு எண் அடிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதான் அப்படித்தான் பிவாசாஆ–7 ஆவணத்திலும் காணப்படுகிறது என்றால் சரிதான். சர்வீஸ் கனெக்சன் எண் –600 வாதி பெயர் தான் இருக்கிறது என்றால் என் தாயார்ஆமாம்.நான் தாக்கல் ஆவணங்கள் என்னால் வழக்கிற்காக உருவாக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல.

6.பிரதிவாதி தரப்பு ஆவணங்களாக நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் அனைத்தும் வழக்குக்காக உருவாக்கப்பட்டவை என்றும் சொன்னால் சரியல்ல. அவை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள தக்கவை அல்ல என்று சொன்னால் சரியல்ல. 1/46 என்ற கதவு எண்ணுக்கான வரி ரசீதுகளை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் ஆமாம் தாக்கல் செய்யவில்லை.

7. 2007 ஆம் ஆண்டு முதல் என் தாயார் பெயரில் வரி ரசீது ஏற்பட்டு இருக்கிறது. எந்த ஆவணங்கள் எதன் அடிப்படையில் வரி ரசீதுகள் பெறப்பட்டன என்ற விவரங்கள் எல்லாம் நான் கேட்டுப் பெறவில்லை. என் தாயார் பெயரில் பெறப்பட்ட வரி ரசீதுகள் அனைத்தும் மோசடியாக கட்டப்பட்டவை என்பதால் தான் நான் என்ன ஆவணங்களையும் அதற்கு ஆதரவாக சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

8. 2007 ஆம் ஆண்டில் நஞ்சப்ப நாடார் வாதி பெயரில் ஏற்படுத்தி கொடுத்த தான செட்டில்மெண்ட் விவரம் எனக்கு தெரியும். வாசாஆ– 18 மற்றும் வாசாஆ– 5 ஆவணங்கள் ஒன்றே போல் தான் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். நான் வாங்கி இருக்கும் சாம்பிள் நகல் அடித்தல் திருத்தல்கள் எதுவும் இல்லை என்றும் சொன்னால் சரிதான். அதனால்தான் வழக்கு போட்டிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். பிவாஆ– 8 ஆவணம் அடித்தல் திருத்தல்கள் எதுவும் இல்லாமல் என்னால் தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

9.தாவா சொத்தில் காளியம்மாளுக்கு எந்தவித பாத்தியம் எதையும் இல்லை என்று சொன்னால் சரிதான்நத்தம் நிலவரி திட்டத்தின் படி பட்டா நஞ்சப்ப நாடார் பெயரில் தான் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். அதன்படி தான் நஞ்சப்ப நாடார் வாதிக்கு தானசெட்டின்மென்டில் கொடுத்துஇருக்கிறார் என்றும் சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V.SREE VIDYA

Digitally signed by V.SREE VIDYA
DN: cn=V.SREE VIDYA, ou=Judicial Officer, o=Principal Subordinate Judge,, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.